முருகப்பெருமான் துணை

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.10.2023**, திங்கட்கிழமை

1. கருமவினை விரண்டோடிட
   கலியின் துன்பங்கள் அகன்றோடிட
   தரும வழிதனை காட்டி அருளும்
   தவராஜனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் அவதார பலம்
   அறிந்து அறிவுரை ஆசிதனை
   வரங்களென சோபகிருது தரிவைதிங்கள்
   வல்லமைதரும் மூவைதிகதி சோமவாரம்
   (சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள், 02.10.2023, திங்கட்கிழமை)
3. வாரமதில் கணம்புல்ல நாயனாரும்
   வழங்குவேன் உலகநலம் பெற
   சோரம்வெல்லும் ஒரே மார்க்கம்
   சுத்த சன்மார்க்கம் மட்டுமே அப்பா
4. அப்பனே ஏற்றுப் பணிய
   அவசியம் ஞானிகள் நாமம்
   காப்பாகச் சொல்லிப் பழக
   கட்டாயம் தன்னுள்ளே மாற்றம்
5. மாற்றம் தானாக நடக்குமப்பா
   மனவடக்கம் தயை சிந்தை
   ஆற்றலும் உள்ளே குடிபுக
   அவசியம் அரங்க ஞானி ஆசி
6. ஆசிதனை பெற வேண்டுமப்பா
   அரங்கன் தரும் குடிலமுது
   பசிபோக்கும் அமுது மட்டுமல்ல
   பாவவினை போக்கி ஞானம்தரும்

7. ஞானம்தரும் அருளமுது அப்பா
நம்பகமுற நாடித் தொடர்பு
ஞானமாக ஏற்று சரணடைய
ஞானவான்களெனும் தகுதி கூடி

8. கூடியே சாமானியர்களும் இனி
குருவரங்கன் கருணை கிட்டிட
அடியவர்களாக ஞானம் மிகுந்த
அரங்கமகான்வழி ஞானிகளாகவே

9. ஆகவே மாற்றம் பெறுவர்
அளவிலா ஞானப்படைகள்
மிகைபட எங்கும் பரவிட
மேலவர்கள் மகா சக்திகளும் மகிழ்ந்து

10. மகிழ்ந்து பஞ்சபூத சக்திகளாக
மாறியே மண்ணில் இறங்கி
மகிழ சேவை ஆற்றும் மக்களை காத்து
மாபாவிகள் அனைவரையும் தண்டித்து

11. தண்டித்து பேருலகம் தன்னில்
தலைமை எல்லாம் ஞானவழி
உண்டாக்கி ஞானஆட்சி படைப்பர்
உரைத்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—